செய்தித் தாளாகப் பதிவுபெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலனசபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம் : விரோதி ஸு (1889) ஆவணி மீ ௨௰௨, அச்சகம் : சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அக] யாழ்ப்பாணம்- சௌமிய ஞு தை மீ ௧௭ உ வெள்ளிக்கிழமை (30-1-1970) [இலக-௩௨

மாவிட்டபுரம் முருகப் பெருமான் சந்நிதியிலிருந்து நல்லை முருகப் பெருமான் சந்நிதிக்கு

# நால்வர் ஊர்வலம்

### 1, 2—2—70 ஞாயிறு, திங்கள் இரு தினங்கள் நிகழும் திருவிழா

திருவருளை முன்னிட்டு, பெரிய புராணப் பாதயாத்திரைக் குழுவினர் மாவிட்டபுரம் முருகப்பெருமான் ஆலய முன்றலில் நடாத்தி வந்த பெரிய புராண விரிவுரையின் பூர்த்தியை முன்னிட்டு. திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தர மூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகளாகியோரின் திருவுருவங்களை ஊர்வலமாக நல்லூரெம்பெருமானாரின் ஆலயத்துக்கு நிகழும் சௌமிய ஞுடம் தை மீ 19-ஆந் திகதி (1—2—70) ஞாயிறுக்கிழமை தாங்கிச் செல்வார்கள்.

இவ் ஊர்வலத்தில் கலந்து நல்லை முருகப் பெருமான்கோயில் வரை பசனை செய்து வரும் பணியில் நாயன்மார்கட்டு சைவசமய அபிவிருத்திக்கழகம், நல்லூர்பசனைச் சபை, வடமாநில சைவ இளைஞர் மாமன்றம் கந்தபுராண கலாசாரசபை, வண்ணைச்சிவன் கோயில் பசனைச்சபை ஆகியனவும் இன்னும் பல சபைகளும் முன் வந்துள்ளன.

யாத்திரை மாவிட்டபுரத்திலிருந்து அன்று காலை 6-30 மணிக்கு ஆரம்பமாகி, பலாலி வீதிவழியாக நல்லூரெம்பெருமானுடைய ஆலயத்தைச்சென்றடையும். அன்று பிற்பகல் 3-30க்கு அங்கிருந்து புறப்பட்டு வண்ணார்பண்ணை தையல்நாயகி சமேத வைத்தீஸ்வரப்பெருமான் ஆலயத்திற்கு திருவுருவங்கள்வந்து சேரும். (2-2-70 திங்கள்) மறு நாட்காலை 6-30 மணிக்கு காங்கேசன்துறை வீதிவழியாக திருவுருவ ஊர்வலம் மாவிட்டபுரத்தைச் சேர திருவருள் கூட்டியிருக்கிறது. யாத்திரை செல்லும் வீதிகளில் வசிக்கும் அன்பர்கள் பூரண கும்பம் விளக்குகள் வாழை தோரண அலங்காரங்களுடன் நாயன்மார் திருவுருவங்களுக்கு அஞ்சலி செலுத்தி நால்வர் பெருமக்களுடைய அருளைப் பெறுவார்களாக.

(எமது நல்லூர் நிருபர்)

மாத்தளை

## ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தான

# மாசி மக மகோற்சவம்

நிகழும் சௌமிய வருடம் தை மாதம் 23-ம் திகதி தொடக்கம் (5-2-70) வியாழக்கிழமை தொடக்கம் மாசி மீ 9-ம் திகதி (20-2-70) வெள்ளிக்கிழமை வரை தினமும் இரவு 7 மணி முதல் 9 மணிவரை தேவஸ்தான வசந்த மண்டபத்தில் நல்லை ஞானசம்பந்தர் ஆதீன கர்த்தர். ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமி நாதத்தம்பிரான் சுவாமிகள் சிவனருட் செல்வர் எனும் தொடர்ச் சொற்பொழிவை சிறந்த பக்கவாத்திய சகிதம் புராண இதிகாசங்களின் தத்துவார்த்தங்கள் நிரம்பிய அரிய சங்கீத கதாப்பிரசங்கம் செய்வார்கள்

துவஜாரோகணம்(கொடியேற்றம்) 4-2-70 புதன்கிழமை, இரதோற்சவம் (ஐந்து இரதங்கள்) 21-2-70 சனிக்கிழமை இரவு, தீர்த்தோற்சவம் 22-2-70 ஞாயிற்றுக்கிழமை, பூங்காவனம் 23-2-70 திங்கட்கிழமை, வைரவர் பூஜை 24-2-70 செவ்வாய்க்கிழமை ஆகும்.

5 2-70 வியாழக்கிழமை தொடக்கம் முறையே, திருஞானசம்பந்தசுவாமிகள். அப்பர் சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள், இளையான்குடிமாற நாயனர் கண்ணப்ப நாயனர், சண்டேசுர நாயனர் என்னும் பெருமக்களைப் பற்றி சங்கீத கதாப் பிரசங்கம் நிகழ்த்தப்பெறும். உற்சவ தினங்களில்அன்பர்களின் வசதிக்காக இரவு 10-30 மணிக்கு விசேட பஸ்போக்குவரத்து ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

(நமது நிருபர்)

காலம் பெறுமதியானது

துரித சலவைக்கு—

மில்க் வைற்

சலவைப் பவுடர்

பாவியுங்கள்.

பாவித்த வெற்றுறைகளைச்சேகரித்து

பரிசுகளைப்

பெறுங்கள்

மில்க்வைற்சோப்தொழிற்சாலை

யாழ்ப்பாணம்.

சிவமயம்
திருச்சிற்றம்பலம்

தாயவன்காண் உலகிற்குத்
தன்னொப் பில்லாத்
தத்துவன்காண் மலைமங்கை
பங்கா வென்பார்
வாயவன்காண் வருமபிறவி
நோய்தீர்ப் பான்காண்
வானவர்க்கும் தானவர்க்கும்
மண்ணுளோர்க்கும்
சேயவன்காண் நினைவார்க்குச்
சித்தம் ஆரத்
திருவடியே உள்கிநினைந்
தெழுவா ருள்ளம்
ஏயவன்காண் எழிலாரும்
பொழிலார் கச்சி
யேகம்பன் காண்அவனென்
எண்ணத் தானே
திருச்சிற்றம்பலம்

-திருநாவுக்கரசுசுவாமிகள்.

காஞ்சிபுரம் தொண்டைமண்டல ஆதீனம்
தேவகுரு மகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசதேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்களுக்கு

# வரவேற்பு விழா வைபவம்

### காரைநகர் மணல்காடு கும்பநாயகியம்மன் கோவில் வழிபடுவோர் சங்கத்தின் நன்முயற்சி

பரமாச்சாரிய சுவாமிகள் சௌமிய வருடம் தைமாசம் 10ம் திகதி (23-1-70) வெள்ளிக்கிழமை மாலை 5 மணியளவில் காரைநகர் சைவமகாசபை மண்டபத்தில் முத்திநிலை எனும் பொருள் பற்றிய அருளுரை வழங்கினர்கள். சுவாமிகள் சோடசோவுப சாரத்துடன் பல விருதுகளுடனும் அடியார்கள புடைசூழ முத்துச் சிவிகையில்மக்கள் அனைவருக்கும் திருவுலாக்காட்சியை நல்கினர்கள். மண்டபத்தில் அடியார்கள் நவரத்தினமயமான பொர்பீடமமைத்து சுவாமி அவர்களுக்கு பாத பூசைகள் செய்து சோடசோவுபசார அலங்காரங்களுடன் மலர் மாலை அணிந்து மலர் தூவி கர்ப்பூரதீபம் காட்டி திருமுறை ஓதி சகல மக்களும குருவழிபாடு செய்தார்கள்.

திருவாதவூரர் பொருட்டுஇறைவனே கயிலையங் கிரியிலிருந்து திருப் பெருந்துறைக்கு வந்து குருந்தமர நிழலின் கீழ் குருபீடமமைத்து பக்குவான்மாவான சத்திநிபாதமடைந்த பரிபக்குவநிலை கண்ட திருவாதவூரருக்கு நயனதீட்சையாலும், பஞ்சாட்சர உபதேசத்தாலும், மானததீட்சையாலும், பரிசதீட்சையாலும் செய்ததுபோல சுவாமிகள் சபையின் கண் இருந்த சகலருக்கும் முறையே தீட்சை வழங்கினர்கள். வேதங்களினதும், ஆகமங்களினதும் சாரமாக விளக்கும் சித்தாந்த சாத்திரமாகிய தேன்போன்ற மெய்கண்டசாத்திரத்தின் உட்பொருளையும் திருமுறையின் சிறப்பான சாயுச்சியமான முத்திநிலையை எடுத்து விளக்கினர் கச்சியப்பசிவாசாரிகள் திருவாயால் சைவநீதி உலகெலாம் விளக்கவேண்டுமென்று திருவாய் மலர்ந்ததுபோல சுவாமிகளும் சைவ நன்மக்கள் வாழ்க. உலகம்வாழ்க என்று கூறினர்

(வளர்ச்சி 4- ஆம் பக்கம்)

## திருஞானசம்பந்த சுவாமிகளின் தேவாரம்

— பண்டிதை ச. அமிர்தாம்பிகை —

தேவாரங்களைப் பக்தியோடும் பண்ணோடும் பாடும்போது அவைகளின் கருத்தை உணர்தல் பெரிதும் பயன்படும். தூய நெஞ்சுடையாரே அப்பாடல்களின் உட்பொருளை அறியவல்லவர் என்றாலும் பழைய பாரமபரியத்தை அடிப்படியாகக் கொண்டுத் தேவாரக்கருப் பொருள்களைப் பற்றிச் சிந்திப்பதே பெரும் சிவபுண்ணியமாகும்

பத்துப் பாடல்களைக் கொண்டமையால் இவைகளுக்குப் பதிகம் என்னும் பெயர் ஏற்படலாயிற்று. தாம பெற்றவின்பம் உலகம்பெற வேண்டுமென்னும் அருணேக்கும் கட்டுக்கடங்காத இறையின்பமும் அக்காலச் சமுதாயத்திற்கேற்ற உபதேசமும், பாடல்களைப் பகதிச் சிரத்தையோடு படிப்பவர்கள் அடையும பயனும், அருட்பாடல்களில் இடம் பெற்றிருப்பதைக் காணலாம். பெரும்பாலான பதிகங்களில், எட்டாம் பாடல்களில் இறைவன் இராவணனுக்கு அருள் புரிந்த திருக்குறிப்பு வலியுறுத்தப்படுகின்றது.

இரண்டாம் திருமுறை

இம்முறையில் திருப்பூந்தாராய் முதலிய நான்கு வினவுரைப் பதிகங்களுள இறைவனை முன்னிலைப் படுத்தி, வினவி. விடையருளும்படி வேண்டுதலால் இப் பதிகங்களுக்கு இத்தலைப்பு சூட்டப்பட்டது. ‘பின்னு செஞ்சடையிற் பிறை பாம்புடன் வைத்ததே’’ எனச் சடாமுடியில், பிறையும் அதன் பகைகயாகிய பாம்பும. உடன் வைக்கப்பட்டிருக்கும் காரணத்தை சொல்லும்படி கடவுளை வேண்டுகிறார். ‘‘தோடுடைய செவியன்’’ எனச் சடாமுடியைச் சிறப்பித்துப் பாடத் தொடங்கிய சுவாமிகள், சடாமுடியின் சிறப்

(வளர்ச்சி 4—ஆம் பக்கம்)

### ஸ்ரீமான். கந்தப்பிள்ளை தினம்

வேலணை, சைவப் பிரகாச வித்தியாசாலைத் தாபகர், சித்தாந்த பண்டிதர் ஸ்ரீமான் வீ. கந்தப்பிள்ளை தினம் மேற்படி வித்தியாசாலை திருஞானசம்பந்தர் மடாலயத்தில் கொண்டாடப் பட்டது. காரணவாய் ஸ்ரீமத். கை. திருஞானசம்பந்தக் குருக்கள் சிவபூசை புரிந்தபின் மாகேசுர பூசை நிகழ்த்தப்பட்டது. ஆசிரியர்களும், பள்ளிக்கூட மாணவர்களும் மேற்படி வைபவததில் கலந்துகொண்டனர்.

## எங்கள் அறிவித்தல்

ஈழத்தின் சுதந்திரதினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு எதிரே வரும் 4-2-70 புதன்கிழமை சைவப்பிரகாச அச்சியந்திர சாலை இந்துசாதன காரியாலயம் இரண்டிலும் விடுமுறை நாளாகும். — அதிபர்


THE SAIVAPRAKSA PRESS

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சௌமிய ஹு தை மீ கஉ-உ வெள்ளிக்கிழமை [1970


## தமிழ்ப்பெயர்களை மாற்றலாமா?

கல்வி இலாகாவினால் வெளியிடப்பட்ட ஏழாம் வகுப்பு புவியியல் வழிகாட்டியில் ஈழத்தின் தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள பிரசித்திபெற்ற இரு துறைமுகங்களாகிய ஊர்காவற்றுறையும், திருக்கோணமலையும் முறையே ஊரத்தோட்டை எனவும், கோகின்ன எனவும் மாற்றப்பட்டிருக்கின்றன. சிங்களப் பிரதேசங்களிலும் தமிழில் வழங்கும் ஊர்ப்பெயர்கள் பிழையாக எழுதப்படுகின்றன. கிழ்மாகாணத்திலுள்ள பட்டிப்பளையாறு கல்லோயா என மாற்றப்பட்டுவிட்டது. பன்னெடுங்காலமாக வழங்கப் பட்டுவரும் பெயர்களை மாற்றுதல் நீதியற்ற செயலாகும். அது தமிழ் மக்களுடைய மனதைப் புண்படுத்துவதாகும். மனித உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். சிங்கள மக்களுக்கு சிங்களமொழி எவ்வளவு அருமையாகவுள்ளதோ அதே போல தமிழ்மொழி தமிழ் மக்களுக்கு அருமையானதாகும். தொன்றுதொட்டு சிங்கள நாட்டிலுள்ள ஒரு பட்டினத்துக்கு வழங்கப்படுகின்ற சிங்களப் பெயருக்குப் பதிலாக வேறு பெயரையிட்டு வழங்குவதைச் சிங்கள மக்கள் சகிப்பார்களா? சகிக்க மாட்டார்கள். அங்ஙனமாயின் தமிழ்ப் பிரதேசத்தில் ஒரு பட்டினத்தினது தமிழ்ப் பெயருக்குப் பதிலாக சிங்களப் பெயரைச் சூட்டுவது சரியா?

தமிழ்ப் பாடப் புத்தகங்களில் தமிழ்மரபுக்கு முரணான வகையில் செய்யப்படும் பிரசுரங்களைத் தமிழ் மக்கள் ஏகமனதாக எதிர்த்தல் வேண்டும். தமிழ்ப்பிரமுகர்களும், தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்களும், ஆட்சி மன்றங்களும மற்றைய சமயச்சார்பான சபைகளும் அரசாங்கம் வெளியிடும் பாடப்புத்தகங்களில் இவ்விதமாகத் தமிழ்ப்பெயர்களை மாற்றுவதையும் தமிழ் மரபுக்கு தீமைசெய்வதையும் தடைசெய்ய முயற்சி செய்தல் வேண்டும். இதுவரை மாற்றப்பட்ட பெயர்களுக்குப் பதிலாக பழையபெயர்களை வழங்குவதற்கு ஒழுங்கு செய்தல் வேண்டும சனநாயக ஆட்சியில் எல்லாச் சமூகத்தவர்களது சமய உரிமைகளும், பாஷை உரிமைகளும், அரசியல் உரிமைகளும் பாதுகாக்கப்படுதல் அவசியமல்லவா?

## சுந்தரஞ்சேர் வித்துவான்

[வண்ணை, நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலையின் தலைமையாசிரியராய் இருந்து இளைப்பாறிய பண்டிதமணி வித்துவான் திரு. ந. சுப்பையபிள்ளை அவர்களுக்கு, இலங்கை சாகித்திய மண்டலம் "உயர்தர உறுப்பினர்" விருதை நல்கியமை காரணமாக மேற்படி வித்தியாசாலைப் பழைய மாணவர் சங்கத்தினர் வழங்கிய வாயுறை வாழ்த்தில் ஒரு பகுதி.]

செந்தமிழுந் தெய்வச் சிவநெறியு மோங்குவிக்கும்
மைந்துடைய பண்டிதநன் மாமணியே — சுந்தரஞ்சேர்
வித்துவான சுப்பைய பிள்ளை யெனுமேலோய்
இத்தரையில் வாழ்க வினிது.

பண்டிதர் பற்பல லோரைப் பாரினி லாக்கித் தந்தாய்
மண்டுபே ரன்பி னோடு மாண்சிவ நெறியி னின்றாய்
தண்டமிழ்ப் புலமை யுற்றாய் சங்கத மொழியுங் கற்றாய்
பூண்ட மணியே! நின்றன் பணிகள்தாம பகரப்போமோ?

## "நாவலர் சைவப் பிரகாச மகாவித்தியாலயம்" ஆக்குக

### பழைய மாணவர் சங்கம் வேண்டுகோள்

(1) "நாவலர் மகாவித்தியாலயம்" என்று இப்பொழுது வழங்கப்படும் பெயரை, "நாவலர் சைவப்பிரகாச மகாவித்தியாலயம்" என மாற்றி அமைக்குமாறு கல்விப்பகுதியினரை இச் சங்கம் கேட்டுக் கொள்வது.

(2) அரசினரால் வெளியிடப்பட்டு வரும் சைவசமய பாடப் புத்தகங்களோடு முதலாம், இரண்டாம், சைவவினா விடைகளையாவது பாடசாலைகளில் சமயநூல்களாகக் கற்பிக்க உதவுமாறு வித்தியா பகுதியிடம் வேண்டிக்கொள்வது.

(3) நாவலர் தர்மகர்த்தாச் சபை தொடர்ந்து இயங்குமாறு செய்து மேலும் நாவலர் நோக்கங்களைப்பரந்த முறையில் செயற்படுத்த நாவலர் தர்மச் சொத்துக்களைப் பயன்படுத்த உதவுமாறு நாவலர் தர்மகர்த்தாச்சபைத்தலைவருக்கு விண்ணப்பம் செய்வது ஆகிய தீர்மானங்கள், 15-1-70 இல் அன்று நடைபெற்ற வண் — நாவலர் மகாவித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில நிறைவேற்றப்பெற்றன.

நேயர் நெஞ்சம்

## நாவலர் ஏற்பாரா?

ஐயா,

ஈழத்து இருபெரும் தமிழ்ப் பகுதிகளின் பழம் பெரும் செந் தமிழ்ப் பெயர்களான ஊர்காவற்றுறையையும், திருக்கோணமலையையும் 'ஊரத்தோட்டா' எனவும், 'கோகின்னி' யெனவும் மாற்றப்பட்டு இலங்கைக் கல்வி இலாகாவினால ஏழாம வகுப்புக்கு எனப் பிரசுரஞ் செய்யப்பெற்ற பாடபுத்தகங்களில்பெயர்சூட்டியிருப்பதைப்பார்க்கும் எந்தத் தமிழ் மகனுக்கும் உள்ளம் வேதனைப்படாமலிருக்கமுடியாது! இவ்விதமான தவறுகள் எதற்காக— யாரால் வருவிக்கப் படுகின்றன என்பதை அறிந்து, தகுந்த ஒரு பரிகாரத்தைச் செய்தற்குக் கல்விப்பகுதியினர் காலதாமதமின்றி முன்வரவேண்டியது மிகமிக அவசியமன்றோ?

**நீதி என்பது இதுதானு?**

"தமிழ் இனத்தின் மீது — நல்லிணக்கத்தை வளர்த்து, சமூகஉறவை என்றும நிலைநாட்டுவதே எங்கள் கட்சியின் அடிப்படை இலட்சியம் என்றும், ஐக்கிய இலங்கையே சுபீட்ச வாழ்வுக்கு வழி என்றும் கூறிக்கொள்பவர்கள் இத்தகைய செய்கைகளைக் கண்டுகொண்டும் காணுதவர் போலவும், கேட்டும் கேளாதவர்போலவும் வாளாவிருந்து மௌனஞ் சாதிக்கின்றார்களா?" என்று சிந்திக்க வேண்டியிருக்கின்றது தமிழ் மக்களுக்கு வழங்கும் நியாயமான அளவு நீதி இதுதானு? சிறுபான்மைமக்களுக்கு அவர்களுக்குரிய நீதியை வழங்கும் இலட்சணம இதுவா?

**மக்கள் அன்று எதிர்த்தது ஏன்?**

கடந்த காலங்களில் தமிழ் இனத்துக்கு இழைக்கப்பட்டு வந்த பல்வேறுபட்ட அநீதிகளையும் துன்பங்களையும் எண்ணும்போது தமிழ்ப்பிரதிநிதிகள் என்ன செய்கின்றார்கள்? என்ற வினுவே எழுகின்றது! தனி நிறுவனங்கள் பாடப்புத்தகங்களை வெளியிட்டபோது எமது பாரம்பரியங்கள் பேணப்பட்டன எங்கள் பண்பாடும, சீலமும் மிளிர பாடப் புத்தகங்கள் வெளிவந்தன. பாடப் புத்தகங்களை அரசாங்கம் வெளியிடத் தீர்மானஞ்செய்தபோதும், பாடசாலைகளை அரசாங்கம் கையேற்க முன் வந்தபோதும் இத் திட்டங்களை மக்கள் எதிர்த்தமை சரியானதே என இப்போது பலரும பேசக் கொள்வதை நாம் அறிகிறோம். பாடப் புத்தகங்களை அரசாங்கம் வெளியிட்டால் தமிழ் மொழிக்கும் தமிழ் மரபுக்கும் இவ்விதமான பங்கம் ஏற்படுமென்றெண்ணியே அக்காலத்தில் பலர் மறுத்தார்கள் சிறந்த நூல்களைக் கற்கும் வாய்ப்பை மாணவர்கள் இழந்தனர். பாடப்புத்தகங்களுக்கு அளவு கடந்த பணத்தைச்செலவிடும் பெரும் சுமை பொதுமக்களுக்கு ஏற்பட்டுள்ளது. இதை யாரும் மறுக்க முடியுமா...?

நாவலர் பெருமானைப் போற்றுகின்றோம நாம — இன்று எம் குழந்தைகளுக்கு நாம் போதிக்கும பாடநூல்களை அவர்கண்டால் என் செய்வார்? எமக்கென்ன என்று வாளாவிருப்பரோ? யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையினர் பன்னெடுங் காலமாக அரிய பொக்கிஷங்களாய பாடப்புத்தகங்களை வெளியிட்டு வந்தார்களே; அப் புத்தகங்களைப் பயின்ற அன்றைய மாணவர்தகுதியும இன்றைய நூல்களைப் பயிலும மாணவர் தகுதியையும் ஒப்ப நோக்குவோர்க்கு உண்மை புலனாகும் எதிர்கால நலனுக்கு நம்பிக்கையோடு உழைக்கும்தொண்டர்கள் பலர் வேண்டும்! சைவசமயக் கல்வி வளர்ச்சிக்கும், தமிழ்மொழி, கலாசார முன்னேற்றத்திற்கும் வேண்டியன செய்ய அபிமானிகள் உழைப்பார்களாக. தேசிய ஐக்கியம சிறந்து வாழ்க.

"காவண்ணு — ஈனு"
நாயன்மார்கட்டு, 21 1-70

### நாவலர் நல்வாக்கு

தரித்திரனுய் இருக்கும் போது திருத்தி அடையாதவன், செல்வனுய போதும், திருத்தியடையான்; திருத்தியடையாமை மனக் குற்றமே அன்றிப் பொருட் குற்றம் அன்று.

## மத்திய கல்லூரியில் மெய்கண்டராதீன மகா சந்நிதானம்

ஞாயிற்றுக்கிழமை (25-1-70) யாழ்ப்பாண மத்திய கல்லூரியில் காஞ்சிபுரம் மெய்கண்டராதீன மகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச பரமாசாரிய சுவாமிகள அருளுரை வழங்கி ஆசி கூறினார்கள.

கல்லூரி இந்து மாணவர் மன்றத்தின சார்பில் நடைபெற்ற இக் கூட்டம் தேவாரபாராயணத்துடன் ஆரம்பமாகியது. அதிபர் திரு. இ. சபாலிங்கம் தலைமைவகித்துச் சுவாமிகளை வரவேற்றுப் பேசினுர். சுவாமிகள் தமது அருளுரையில் இலங்கையில சமயக் கல்விபோதிக்கப்படுவதைக அறிந்து தாம் பெருமகிழ்ச்சி கொள்வதாகவும் (பாடசாலைகளில்) இந்தியாவில் இத்தகைய கல்வி நடைபெறுவதில்லையெனவும குறிப்பிட்டு இங்கு சிறப்பாக திருவருட்பயன் கற்பிக்கப்படுவதைக் குறித்துப் பெருமையடைவதாகக் கூறினுர். 'சிவாயநம' என்னும் ஐந்தெழுத்திலுள்ள சித்தாந்தக கருத்தைச் சுருக்கமாக விளக்கிய சுவாமிகள் அதிலே உலோகாயுதம் (Materialism) மறுக்கப்படுவதைச் சுட்டிக் காட்டினுர்கள். கல்வியறிவுடையோர்கள் கவிகள் (புலவர்கள்) பெருமதிப்பைப் பெறுகிறுர்களெனவும் கல்வியறிவில்லதார் கல்லுக்குச் சமமானமாகிறுர்களெனவும் சுவாமிகள் மொழிந்தார்கள். திரு. க. சோமசுந்தரம் நன்றி தெரிவித்துப் பேசினுர்கள.

### ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

மார்கழி மாதத்தில் திருக்கேதீச்சரத்தில் நடைபெற்ற திருவாசக விழாவுக்கு ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டத்தாரால் அழைக்கப்பட்ட காஞ்சிபுரம், மெய்கண்டராதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் இதுவரை யாழ்ப்பாணத்தில சிறந்த முறையில் சித்தாந்த வகுப்புகளை நடத்தி வந்தனர். நேற்றைய தினம் அவருடைய வகுப்பில் பாடங்கேட்டவர்களும் பிறரும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மண்டபத்தில் ஒரு பிரியாவிடைக் கூட்டத்தை நடாத்தனர் சுவாமிகளை நடுநாயகமாக வீற்றிருக்கச் செய்து கிழற்படமும் பிடிக்கப் பெற்றது சுவாமிகள் 15 நாட்களுக்கு கொழும்பு மாநகரிலும் 15 நாட்களுக்குக் கண்டி மாநகரிலும் சித்தாந்த வகுப்புகள் நடத்துவார்கள்.

### நீதியரசர் பொன் ஸ்ரீஸ்கந்தராசா

அகில இலங்கை இந்து மாமன்ற தலைவராகக் கடமை புரிந்து சைவசமய வளர்ச்சிக்கும் தமிழ்மொழி வளர்ச்சிக்கும் பொதுமக்கள் நலனுக்கும் நீதி வழுவாமல தொண்டாற்றிய காலஞ்சென்ற பெரியார் சைவசிகாமணி பொன். ஸ்ரீ ஸ்கந்தராசா அவர்களதும், அவருடைய அன்பிற்குரிய பாரியார், காலஞ்சென்ற திருமதி கண்மணி ஸ்ரீ ஸ்கந்தராசா ஞாபகார்த்த கூட்டமொன்று 29-1-70 வியாழக்கிழமை கொழும்பு யூனியன் பிளேஸ் இறஸ்தவ இளம் மகளிர் கல்லூரி ஜூபிலி மண்டபத்தில், நீதியரசர் கௌரவ ஏச். என் ஜி. பெர்னுண்டோ ஓ. பி இ. தலைமையில் நடைபெற்றது. சிங்கள, முஸ்லிம் தமிழ் பெருமக்கள் ஞாபகார்த்த உரை வழங்கினுர்கள்.

### மெய்கண்டார் கழகம்

இன்று மேற்படி கழக ஆதரவில் வண்ணை, வைத்தீஸ்வரன் கோவிலில் தக்ஷிணுமூர்த்திக்கு அபிஷேகம் மு ப. 10 மணிக்கு நடைபெறும். இரவு 7 மணிக்கு ஆராதனையும்; சிவஞானபோத சூத்திரப் பாராயணமும் திரு அ நாகலிங்கம் அவர்களது சிவஞானபோத மூன்றாம் சூத்திர ஆய்வேடு வாசித்தலும் நிகழும்.

## COMMISSION SALE
### கோட்டுக் கொமிஷன் விற்பனவு அறிவித்தல்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் இல: 10175

இமையாணன்
1. ஆறுமுகம் ஞானப்பிரகாசம்
2. குகப்பிரகாசம் கைம்பெண் நாகம்மா —வழக்காளிகள்

எதிராக

உடுப்பிட்டி
1. அம்பலம் கதிரவேலு
2. தம்பு இரத்தினம்
3. பெண் சரஸ்வதி
4. கணபதிப்பிள்ளை சேவரத்தினம்
5. பெண் இராசம்மா

—எதிராளிகள்

மேலே சொல்லப்பட்ட இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன் கீழ் விபரிக்கப்படுமாதனங்கள் 1970-ம் ஆண்டு மாசி மாதம் 20-ம் திகதி (20-2-70) வெள்ளிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் குறித்த காணிகளிடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதனங்களின் விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப் பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று உடுப்பிட்டி இறை செம்பாடு விலப்பரப்பு 3, 1/2 இவைகளில் ஷை விலப்பரப்பு 1, 3/4 தட்டாம் புளியடி விலப்பரப்பு 2½ இவைகளில் 1-ம் பிரிவு முழுவதும் 2-ம் பிரிவில் அரை வாசியும் 3-ம் பிரிவில் 1/4 பங்கும் ஓரே காணியாகவிருக்கின்றது இதன் விசாலம் விலப்பரப்பு 5 இதற்கு ஆட்சியிலிருக்கும் விலப்பரப்பு 6 குளி 6 இதில் ரோட்டுக்கு தெற்கே விலப் பரப்பு 3 குளி 14, 7/32 இதுவும் ஷை இறை செம்பாடு விலப் பரப்பு 3ம் தற்காலம் ஓரே துண்டாயிருக்கிறது இதன் விசாலம் விலப் பரப்பு குளி 14, 7/32 இதற்கு உலாந்தா சேஸ்தர் வே சிவரத்தினத்தால் 31-12-63ல் 2330ம் இலக்கத்தில் விந்தாசிக்கப்பட்ட படத்தின்படி விலப் பரப்பு 6 குளி 17, 8/32

1. குறித்த படத்தில் 4-ம் நம்பர் துண்டுக குளி 15, 14/32 எல்லை கிழக்கு: கதிர்காமர் சிதம்பரப்பிள்ளையின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுடைய வாதனம். வடக்கு குறித்த படத்தில் 5-ம், 7-ம் நம்பர் துண்டுகள் மேற்கு: குறித்த படத்தில் 3-ம் நம்பர் துண்டு தெற்கு வல்லிபுரம் இராமலிங்கத்திற்கும் மறுபேருக்குமுடைய வாதனம், இடங்களும் 7-ம், 8-ம், 9-ம். நம்பர்த் துண்டுகளிலும் 9-ம் நம்பர்த் துண்டுகளிலும். 9-ம் துண்டுக்குள்ளிருக்கும் கிணற்றிலும் இதற்குரிய பங்கும்.

2. குறித்த படத்தில் 2-ம் நம்பர் துண்டுக்குக்குளி 15, 14/32 எல்லை கிழக்கு: குறித்த படத்தில் 7-ம் நம்பர் துண்டு வடக்கு குறித்த படத்தில் 1-ம், 8-ம் நம்பர்த் துண்டுகள் மேற்கு: செல்லையா கணபதிப்பிள்ளைக்குடைய வாதனமும உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலைக்குரிய ஆதனமும் தெற்கு குறித்த படத்தில் 3-ம் நம்பர்த் துண்டு இது முழுவதும் 7ம், 8,ம 9-ம நம்பர்த் துண்டுகளிலும் 9-ம நம்பர்த் துண்டுக்குள் ளிருக்கும் கிணற்றிலும் இதற்குரிய பங்கும்.

3. குறித்த படத்தில் 3-ம் நம்பர் துண்டுக்குக்குளி 12 14/32 எல்லை கிழக்கு குறித்த படத்தில் 4-ம், 7-ம் நம்பர்த் துண்டுகள் வடக்கு குறித்த படத்தில் 2ம் நம்பர்த் துண்டு, மேற்கு உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலைக்குரிய வாதனம் தெற்கு வல்லிபுரம் இராமலிங்கத்துக்கும் மறுபேருக்குமுடைய வாதனம் இது முழுவதும் 7-ம 8-ம், 9-ம்நம்பர்த் துண்டுகளிலும 9-ம் நம்பர்த் துண்டுக்குள்ளிருக்கும் கிணற்றிலும் இதற்குரிய பங்கும்.

தீர்ப்புத்தொகை ரூ. 4941-87
ரூபா 4035-51க்கு
23-8-68 தொடக்கம்
15-11-68வரை 9%வட்டி 83-00
ரூபா 5024-81க்கு
15-11-68 தொடக்கம்
5-9-69 வரை 5%வட்டி 271-00
மொத்தம் 5295-87
இதில் கட்டப்பட்ட
தொகை 500-00
4795-87

V. M கந்தசாமி
Commissioner of Sales, Valuer
வல்வெட்டித்துறை
17-1-70 எம், 384 30-1-70

# ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்

## A Dialogue betw:en a theist & an Atheist

இச்சம்பாஷணை சைவப் பாடசாலைகள் தோறும் அவசியம் கற்பிக்கப்பாலதொன்றும்.

— சைவப்புலவர் திரு. வ. சுப்பிரமணியம் புலோலி, —

(முன் வளர்ச்சி — 2)

**சுந்தரம்:** நாம் கடவுளைப் பூசித்தால் (வணங்கினல்) அவருக்கேதேனும் இலாபம் உண்டோ?

**கந்தன்:** அவருக்கு யாதொரு இலாபமும் இல்லை. அவர் விருப்பு வெறுப்பற்றவர் இன்ப, துன்பம் இல்லாதவர்; நாம் துன்பத்தினின்றும் நீங்கி இன்பம் பெறும் பொருட்டே அவரை வணங்குவது.

**சுந்:** அப்படியானல் நான் இப்போது உன்னுடன் கோயிலுக்கு வந்து தேங்காய் உடைத்து கும்பிடு போட்டால் என் துன்பமெல்லாம் போய் இன்பம் உண்டாய் விடுமா?

**கந்:** நீரிற் குமிழிபோல் நிலையற்ற இவ்வுலக இன்பத்தை அனுபவிப்பதற்கு இரவும் பகலும் எவ்வளவு பாடுபடுகிறாய்! அதில் ஆயிரத்தில் ஒரு கூறளவாயினும் பாடுபடாமலும் தேங்காய் உடைத்துக் கும்பிடு போட்டால் துன்பம் நீங்கி பேரின்பம் உண்டாய் விடுமா? ஒரு போதும் உண்டாகாது.

**சுந்:** ஆனல், அந்தக் கடவுளை யடைந்து இன்பம்பெறுதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

**கந்:** சுத்தமான மனதோடு அவரை வணங்க வேண்டும்.

**சுந்:** மனம் எப்படி யிருந்தால் சுத்தமாகும்?

**கந்:** மனம், வாக்கு, காயம் என்னும் மூன்று கருவிகளும் சுத்தமாயிருக்கவேண்டும்: முதலாவது தேகம் சுத்தமாயிருக்கவேண்டும். குளித்தல். சுத்தமான உடையைத்தரித்தல், சுத்த போசனஞ் செய்தல், சுத்தமான வேலைகளைச் செய்தல், முகம் மலர்ந்திருத்தல் முதலியவற்றால் சரீர சுத்தி யுண்டாம்.

பொய் சொல்லாமை, கடுஞ்சொல் பேசாமை, கோள் சொல்லாமை, பயனில் சொல் பேசாமை, இன் சொல் கூறல், முதலியவற்றால் வாக்குச் சுத்தம் உண்டாம் ஐம்புலன்களின் வழிச் செல்லாமல் சாந்தம், கருணை, அன்பு முதலிய பெருங் குணங்களை வகித்தலால் மனம் பரிசுத்தமாகும். மனம் சுத்தமாதற்கு வாக்குச் சுத்தமும் காயச் சுத்தமும் அத்தியாவசியமாம். சரீரம், வாக்கு, மனம் என்னும் மூன்று கருவிகளைச் சுத்தஞ் செய்யும் மார்க்கங்கள் முறையே சரியை, கிரியை யோகம் என்று சொல்லப்பெறும். ஆலயத்தில் தொண்டுகள் செய்வதினலும், விபூதி, உருத்திராட்சம் முதலிய சிவ சின்னங்களைத தரிப்பதனலும் காயச் சுத்தம் உண்டாம். சிவ பூசை முதலியவற்றால் வாக்குச் சுத்தம் உண்டாம். யோகம் செய்து ஐம்புலன்களை யடக்கி, மனதைக் கடவுளிடத்து நிலைபெறச் செய்வதினல் மனச் சுத்தம உண்டாம்.

இம் மூன்று சுத்தமும் உண்டானல் மெய்ஞ்ஞானம் உண்டாம் மெய்ஞ்ஞானத்தின் பயனாக கடவுளிடத்தில் மெய்யன்பு உண்டாகும். மெய்யன்பு வளருந்தோறும் பேரின்பம் விளையும். இதுதான் கடவுளை யடையும்வழி இவ் வழிகளில் நீ நடப்பாயானல், கடவுளை யடைந்து எல்லையற்ற இன்பக் கடலில் ஆழ்ந்திருப்பாய்.

**சுந்த:** அப்பா, நீ சொல்வது ஒவ்வொன்றும் ஒவ்வொரு மாணிக்கமாய் இருக்கிறது. இதுவரையில் நான் உன்னையடைந்து இவைகளைத் தெரிந்து கொள்ளாமைக்கு மிகவும் வருத்தப்படுகிறேன் இது முதல் நீயே எனக்கு குருவாயிருந்து என்னைச் சன்மார்க்கத்தில் செலுத்த வேண்டும்.

(சுந்தரம்: நிலத்தில் வீழுந்து கந்தசாமியை நமஸ்கரிக்கின்.)

**கந்:** அப்பா எழுந்திரு உனக்கு நற்காலம் பிறந்து விட்டது. இனி நீயும் சிவசின்னங்களைத் தரித்து, சிவாலய சேவையும் பெரியோர் வழிபாடும விடாமற செய் நமது அருமையினும் அரிய, அமிழ்தினும் இனிய தேவாரப் பதிகங்கள் சில சொல்லுகிறேன். கேள்:

எவரேனுந் தாமாக விலாடத்திட்ட
திருநீறும் சாதனமும கண்டால் உள்கி
உவராதே அவர் அவரைக் கண்டபோது
உகந் தடிமைத் திறம் நினைந் தங்கு உவந்து நோக்கி
இவர் தேவர் அவர் தேவர் என்று சோல்லி
இரண்டாட்டா தொழிந்து ஈசன் திறமே பேணிக்
கவராதே தொழும் அடியார் நெஞ்சினுள்ளே
கன்றுப்பூர் நடுதறியைக் காணலாமே.

வளர்ச்சி 4-ஆம் பக்கம்

**இந்துசாதனம்**
திருத்திய வருடசந்தாவிகிதம்
உள்நாடு
ஆங்கிலம் 10-00
தமிழ் 10-00
ஆங்கிலம் - தமிழ் 15-00
வெளிநாடு
ஆங்கிலம் 12-00
தமிழ் 12-00
ஆங்கிலம் - தமிழ் 18-00

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம டிஸ்திறிக் கோட்டில்

கதிரவேலு முருகேசு கைம்பெண் மூத்துப்பிள்ளை வட்டுக்கோட்டை மேற்கு —வழக்காளி

இல M B 10257 எதிராக

(1) குணரெத்தினம் கந்தையா கைம்பெண் தைரியலெட்சுமி அல்லது திருப்பதிப்பிள்ளை (2) வப்புத்துரை கருணாகரும் பெண் (3) கமலாம்பிகையும், எல்லோரும் வைமன் ரோட், யாழ்ப்பாணம் (4) கோப்பாய் ஆசிரிய கல்லூரி அதிபர், R. ஆனந்தகுமாரசாமி பெண் ரதிலெட்சுமி தனித்தும் ஆனந்தகுமாரசாமியின் ஆதனங்களின் பிரதிநிதியாகவும் (5) K பொன்னுச்சாமி மகள் சிவஞானவல்லி, பருத்தித் துறை (6) S. பரமகுருநாதன் வைமன் ரோட், யாழ்ப்பாணம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின், M. B 10257-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணி 1970-ஆம் ஆண்டு மாசிமாதம் 26-ம் திகதி (26-2-70) வியாழக்கிழமை முற்பகல் 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 20670/-க்கு 31-8-68 தொடக்கம் 25-7-69 வரைக்கும் ரூபாய் 12000/-க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபாய் 609-37

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி நல்லூர் கோவிற்பற்று நல்லூர் இறை, கலட்டி நி. பா. 5. இதில் நி. பா. (3) நிலப்பாட்டு மூன்றுக்கும் எல்லை கிழக்கு வைத்திலிங்கம் இராசரெத்தினம் பெண் செம்மனச்செல்வியின் ஆதனமும். நாகலிங்கம் விக்னராஜா பெண் இராசலெட்சுமியின் ஆதனமும், கருணாகரன் பெண் கமலாம்பிகையின் ஆதனம்-இவ்வாதனத்தின் மிகுதி, மேற்கு வைமன் ரோட்; தெற்கு: ஒழுங்கை.

கலைமணி பொ. செல்வக்குமாரசுவாமி
"கலை இல்லம்" கொமிசனரும், விலைமதிப்பாளரும்.
அராலி வடக்கு, வட்டுக்கோட்டை
1970ம் ஆண்டு தைமீ 24-ம் திகதி M. 388 30-1-70

## கோட்டு விற்பனவு விளம்பரம்

பொன்னு ராசையா நவாலி வடக்கு, —வழக்காளி

இல: M, B. 9657 எதிராக

ஆறுமுகம் திருஞானசோதி, உருத்திராம், தற்போது சுவாமி ரோட்டு. கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B. 9657ம் இலக்க வழக்கில எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1970-ம் ஆண்டு பங்குனி மீ 1-ந் திகதி (1-3-70) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபா 4416-85 இதில் ரூபா 3700/-க்கு 28-12-67 தொடக்கம் 8-10-68 வரைக்கும் 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 283-02

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தென்மராட்சிப் பகுதி நாவற்குளி கோவிற்பற்று கைதடி இறை கொத்தான் கடை என அழைக்கப்படும் காணி நி பா. 24 இதில் வடக்குப் பக்கத்தால் நி. பா. 12. இந்த நி. ப. 12ல் வாண்மயிரும், எல்லை கிழக்கு பிளானின்படி T. P. 388072 and 94531 and-Property depicted by lot 3 in T. P. 6813 எல்லை வடக்கு: சின்னத்துரை பெண் தவமதி அம்மா எல்லைமேற்கு: ஆறுமுகம் பரஞ்சோதியும் காணியின் ஒரு பகுதி பாதைக்கு ஒதுக்கப்பட்ட நிலம் தெற்குப் பக்கம் இதன் மிகுதியான காணி அடங்கலும்.

நம் 35/2, கொழும்புத்துறை வீதி, இ. கனகரத்தினம்,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம், கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
(எம் 387, 30-1 70)

## கோட்டு விற்பனவு விளம்பரம்

உடுவில் 1. சின்னத்தம்பி இரத்தினமும் மனைவி
2. இராசதங்கம் —வழக்காளிகள்

இல. M. B. 5153 எதிராக

உடுவில் 1. அப்புக்குட்டி திருநாவுக்கரசு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 5153ம் இலக்க வழக்கில் எனக்கு கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1970ம் ஆண்டு மாசி மாதம 27-ம் திகதி (27-2-70) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபா 3367-50 சதம் 11-10-62 தொடக்கம் 27-5-65 வரைக்கும ரூபா 3000/- வருடமொன்றுக்கு 3வீத வட்டியும் அதன் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 372-81 சதம அதாவது ஏற்பட்ட செலவு ரூபா 236-92 சதம் வெளியாத்துச் செலவு ரூபா 68-82 சதம் இனிமேல்வரும செலவு ரூபா 67-07 சதம்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம மாவட்டம் வலிகாமம் வடக்குப் பிரிவு உடுவில் கோவிற்பற்று உடுவில் இறை 'எல்லை முல்லை' பரப்பு நில லாச்சம் 20 மேற்கெல்லையில் இருக்கும் கிணறும் 12 அடித் தூர்வையும் எல்லை கிழக்கு: பொன்னன் சண்முகத்தின் ஆதனமும், ஒழுங்கையும். வடக்கு: தம்பு சுப்பிரமணியத்தினதும் மனைவி இரத்தினத்தினதும் ஆதனம், மேற்கு: வல்லிபுரம் செல்லையாவினுடையதும், நமசிவாயம் கந்தையாவினுடையதும் ஆதனம், தெற்கு: ஒழுங்கை இதில் முழுவதிலும் பிறிவிடாப்பங்கு ஐந்தில் ஒன்று

சி. செ. பாலசிங்கம்
அராலி வடக்கு, கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
வட்டுக்கோட்டை, 24-1-70 [எம். 386 30-1-70]

## ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்

[2 ஆம் பக்கத்தின் வளர்ச்சி]

இத்திருப் பதிகத்தால், சிவ சின்னங்கள் தரித்தவர்களை யாவர் சிவனாகவே கருதி வழிபடுகின்றார்களோ அவர்கள் மனதில் சிவபெருமான் குடிகொண்டிருப்பாரென்று வேதம் கூறுகின்றது.

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீ வா
நித்தலும் எம்பிரானுடைய கோயில் புக்கு
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டு
பூமாலை புனைந்து ஏத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்துமாடி
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடை யெம்மாதீ என்றும்
ஆரூரா என்றென்றே அலறுநில்லே

இத் திருப்பதிகத்தால், என்றும் நிலைபெற்ற இன்ப வேண்டுவோர் சிவாலயத் தொண்டு செய்தல் வேண்டுமென்று சொல்லுகிறது ஸ்ரீமத் தாயுமான சுவாமிகளும்,

"அன்பர்பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்
இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே"

என்றருளிச் செய்தனர் இதனால் பெரியோர் வழிபாட்டின் பெருமை உணரலாகும்,

**சுந்:** என் அண்ணலே, நான் இது வரையில் சிவனங்களைத் தரிக்கவில்லை, சிவாலய சேவை செய்யவில்லை; பெரியோரைப் பணிந்ததில்லை; நான் படித்த பாடசாலைகளுள் ஒன்றிலாவது இவைகளை எனக்கு கற்பித்தாரில்லை ஆதலால், நான் இவைகளைத் தூஷித்துப் பாவியானேன் இனி நான் உய்யுமாறு கருணை கூர்ந்து என்னை அடிமையாக்கிக் கொள்ளல் வேண்டும்

(மறுபடியும் சுந்தரம் தரையில் விழுந்து வணங்குகிறான்

**கந்:** அப்படியே சிவசின்னதாரணம் செய்கிறேன்) அப்பா எழுந்திரு. இப்போது நான் உனக்குச் செய்த உபதேசமானது வீணாகாமல் உடனே பயன்பட்டமைக்கு மிகவும் சந்தோஷப்படுகிறேன் இனி, உனக்கு என்ன சந்தேகம் இருந்தாலும் என்னைக் கேள் எனக்குத் தெரிந்த வரையில் சொல்லுகிறேன் தெரியாவிட்டால் தெரிந்த பெரியோர்களையடுத்துத் தெரிந்து கொள்ளலாம்.

**சுந்:** சுவாமி இப்படிப் போதிப்பாரில்லாமல் என்போன்றோர் பலர் கெட்டுப் போகிறார்களே. இவர்கள் கெடாதபடி, பாடசாலைகளில் சிறுவர்களுக்கு நம்மவர்கள் சமய போதனை செய்யலாகாதா?

**கந்:** இவ்விதம் சம்பாஷணைகள் மூலமாய் அல்லது நாடக மூலமாய் சமயமும் அதன் சாதனையும் நன்கு கற்பிக்கப்படவேண்டும் நான் எனது பாடசாலையில் படித்தே நல்லொழுக்கமுடையவனானேன். வெகு நேரமாய் விட்டது; போய் இன்னொரு சமயம் வாரும்.

**சுந்:** நமஸ்காரம். போய் வருகிறேன் சுவாமி.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

(இறந்துவிட்டார்) 1. இராசசிங்கம் பரநிருபசிங்கம்
2. மனைவி பாக்கியம் இருவரும் சரவணை

வழ இல: M. B 11400 எதிராக —பதில் வழக்காளி

1. V கந்தையா பொன்னம்பலம்
2. மனைவி அன்னபூரணி அம்மா இருவரும் வேலணை மேற்கு,
6. பசுபதிப்பிள்ளை அரசகேசரி வேலணை மேற்கு, —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் M. B. 11400-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுள் விபரிக்கப்படும் துண்டுக்காணிகள் 1970-ஆம் ஆண்டு பங்குனி மீ 21-ந்திகதி (21-3-70) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 11394/- 20-11-65 தொடக்கம் பணம்கொடுத்து தீர்க்கும் வரைக்கும் ரூபா 11,394/-க்கு 5வீத வட்டியும் மற்றும் செலவுகளும்.

ஆதன விபரம

4 வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப் பகுதி வேலணை இறை "புண்ணியம்புலம்" பரப்பு. நெல். லாச்சம் 11½ மேற்கு எல்லையிலிருக்கும் கிணற்றின் பங்கும், இதற்கு எல்லை கிழக்கு: காலஞ்சென்ற சேதுபதி பொன்னையாவின் உரிமைக்காரருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், வடக்கு: நல்லதம்பி செல்லத்துரைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் மேற்கு: முருகேசு சின்னையாபிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள் தெற்கு கந்தையா கைலைபெயர் முத்துப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள். இதில் 7/8 பங்கு, பதிவு இலக்கம்: C 148/63

5 மேற்படி இறை "கொப்பைச்சிட்டி கிழக்கு" பரப்பு நெல். லாச்சம். 14 குளி 3½ கிணறும். மேற்கு எல்லையிலிருக்கும் கிணற்றின் பங்கும் இதற்கு எல்லை கிழக்கு: சிதம்பரப்பிள்ளை கனகரத்தினத்தின் ஆதனம், வடக்கு: ஒழுங்கை, மேற்கு: நாகலிங்கம் இரத்தினத்தின் ஆதனம், தெற்கு: செல்லமுத்து நமசிவாயத்திற்கும் மறுபேருக்குமுரிய ஆதனங்கள், இதடங்கலும் பதிவு இலக்கம்: C. 270/25

"கமலபதி" — மு. நவரத்தினராசா
ஆஸ்பத்திரி வீதி, — கொமிசனரும், விலைமதிப்பாளரும்
மண்டைதீவு. 24-1-70 — எம். 390 30—1—70

ஆறிருதடந்தோள்வாழ்க வறுமுகமவாழ்க வெற்பைக்
கூறுசெய்தனிவேல்வாழ்க குக்குடம்வாழ்க செவ்வேள்
ஏறியமஞ்ஞைவாழ்க யானைதன்னணங்கு வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்கசீரடியா ரெல்லாம்.

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 30—1—1970 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர் திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

## திருஞானசம்பந்த சுவாமிகளின்


1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

யைபயிட்டு, வினவுவது பொருத்தமானதே இப்பதிகத்தில் பாடல்தோறும் மூன்றாவது அடியில், "சொலீர்" என்று இறைவனை தனது கேள்விக்கு விடையிறுக்கும்படி வேண்டுகிறார். கண்ணுதலான் காட்டாவிட்டால் காண்பார் யார். ஆனகால் சுவாமிகள் இறைவனைத் தனது வினாக்களுக்கு விடையிறுக்கும்படி வேண்டுவது சாலவும் பொருந்தும்

எவ்விடயங்களை உணர வேண்டிக் கடவுளிடம் வினவுகிறார்? முன்னொருமுறை இறைவனிடம் சுந்தரர் பொன் வேண்டினார் திருவடிக்கீழ் ஒரு தலைமறைவு தரும்படி நாவுக்கரசர் முறையிட்டார். தனயன் தகப்பனோடு பழகும் உரிமையோடு 'சொலீர்' என்று சுவாமிகள் கேட்டுக்கொள்கிறார். இறைவனைப் பற்றிச் சொல்வதற்கு இறைவனை விடத் தகுதியுள்ளவர் யார்?

முதலிரண்டு தேவாரங்களிலும இறைவனை விளக்கும போது "முடிதோய் கழலீர்" 'பொற்கழலீர்" என எம்பெருமானுடைய திருவடியை விதந்து வழிபடுகிறார். கடவுளின் திருவடி ஞானமே ஆன்மாக்களின் அறியாமையாகிய இருளைப் போக்கி இறைஞானத்தைத் தரவல்லது. மணிவாசகனாரும் "நாதன்தாள் வாழ்க" எனத் தமது வாசகத்தின் முதலடியில் ஆண்டவன் அடியைப் பொதுவாக வாழ்த்த சுவாமிகள கழலணிந்த பாதத்தைப் போற்றுகிறார். சினமென்

### தூயவை துணிந்தால்



**பக்தர்** "கச்சியப்பசிவாச்சாரிய சுவாமிகள் குருபூசையைச் சைவ உலகமெங்கணும் கொண்டாடச் செய்ய வேணுமென்றும், கந்தபுராண வாரமனுட்டித்து ஞானசம்பந்தர் ஆதீனக் கலாமண்டபத்தில் கந்தபுராண நூற்காட்சி ஒன்றை நடாத்துவதென்றும், சில அருமையான தீர்மானங்களை "நாவலர் – கந்த புராண கலாசார சபை"யினர் செய்திருக்கினமாம் பாருங்கோ"

**சித்தர்:** "பெயருக்கிசைய நல்ல பணிபுரிய முன் வந்திருக்கிறார்கள் அப்பிடீன்னு சொல்லுங்களன்; இக்காலத்துச் சூழ்நிலைக்கு மிகவும் இன்றியமையாத பணி இது பாருங்கோ, சுவாமிகள்பேரால் சபையமைத்து— சைவ சமயப் பணியாற்ற முன்வந்த சபையை வாழ்த்தவேணும்;'வாழ்க' நாவலர்பெருமானதுஆத்மசக்திதான் இவைகளுக்குங் காரணமோ ?"

"நாயன்மார்-சாதன்"

## அடைவு நகைக ஏலவற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் வலந்தலை வடக்கு. காரைநகரில் அடைவு பிடிக்கும வே. சுப்பிரமணியம் அவர்களின் அடைவு கடையில் 1966-ம் ஹு ஆனி மாதம் 22-ம் திகதி தொடக்க 1968-ம் ஹு பங்குனி மாதம் 31-ம் திகதிவரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னால் 1970-ஆ ஹு மாசி மாதம் 15-ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் ஷெ அடைவு கடையில் இருந்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காரைநகர். — வை ஏரம்பமூர்த்தி
Auctioneer
9-1-70 — எம் 376 16. 23.1-70 — ஏலவிற்பனையாளர்

## அடைவு நகை ஏலவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம், காங்கேசன்துறை றோட்டில் 415/A இலக்க கடையில் க. நடராசா அவர்களிடம 1968 ம் ஹு ஒக்ரோபர் மீ 1-ம் திகதி (1-10-68) திகதிக்கு முன் வைத்த அடைவு நகைகளில் மீட்கப்படாதவை 1970 ம் பெப்ரவரி மாதம் 26-ம் திகதி (26-2-70) வியாழக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி செ. குட்டிப்பிள்ளை,
ஏல விற்பனவாளர்.

"இராசகிரி"
843, காங்கேசன் துறைவீதி, — கொமிஷனரும் விலைமதிப்பாளரும்
யாழ்ப்பாணம். — எம் 389, 30-1, 6-2-70

யாழ்ப்பாணம

## —ஐக்கிய இலாப நிதி—

கொம்பனி லிட், (ஸ்தாபிதம் 1918)

10,000-00 பங்குகள் ரூபா 5 விகிதமான 50,000-00

மாதாந்த சேமம் கட்டும் முறை.

மாசமொன்றுக்கு ரூபா 10-00 விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் கட்டுப் பணமும் வட்டியுமாக ரூபா 1000-00 திருப்பிக் கொடுக்கப்படும். ரூபா 100-00 விகிதமாகக் கட்டினால் ரூபா 10,000-00 கொடுக்கப்படும்.

சேமிப்பு பற்றுவரவு எச்சநிதி.

ரூபா 1500-00 க்கு குறையாமல் இருக்குமாயின் 1 வீத வட்டியுடன் சேமிப்புப் பற்று வரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட சேமம்.

சேமப்பணம் முறையே, 12, 24, 36, என்னும் மாச காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டி முறையே 7, 8, 9, வீதமாகக் கொடுக்கப்படும்,

கடன்.

நகைகள் ஈடு வைத்துக் கொண்டும், சேமப்பணத்தைப் பிணையாக வைத்துக் கொண்டும் கடன் கொடுக்கப்படும் முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை எங்கள் காரியாலய மூலமாக அறிந்துகொள்ளலாம் — மனேஜர்

## திருக்கோபுரம்

திருவருளின் துணையினால் அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் கோவில் திருக்கோபுர அத்திவாரம் இடும் வைபவம் தை மீ 15-ம் திகதி (28-1-70) அன்று அதிகாலை 4-30 மணி தொடக்கம் 7-30 மணி வரையும் நிகழ்ந்த சுபவேளையில் இனிது நிறைவு பெற்றது. (ந நி)

னும் சரக்கை ஏற்றி, மதி என்னும் கோலை ஊன்றி, அலைபிறவிப் பெருங் கடலில் தத்தளிக்கும வாழ்க்கைப் படகில் உள்ள ஆன்மாக்களுக்கு வீரக்கழலணிந்தபாதம் எவ்வளவோ ஆதரவளிக்கும சழலணிந்த திருவடி நடராஜப் பெருவடிவத்தில் ஊன்றிய பாகமாகி ஆன்மாக்களின் அறிவை மறைக்கும் ஆணவமாகிய முயலகனை அழிக்கிறதல்லவா? ஆனதால் செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே.

'உரிபோர்த்தகந்தீர்' என யானையையுரித்த தீரச்செயலைகுறிப்பிடுகிறார் அதே போல அடியவர்களுடைய மதங்கொண்ட யானையாகிய ஆணவத்தையும அடக்குகிறார். மேலும் உரிபோர்த்த திருமேனியழகும் போற்றப்படுகிறது, கந்தபுராணம் பாடிய கச்சியப்பரின் சிவக்கண்களுக்கு கரிமுகில படிந்த செம்மலை, உரிபோர்த்த திருமேனியழகை நினைவூட்டுகிறது. இறைவனிடத்தில் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கும் கண்களுக்கு இயற்கையழகும் இறைவனாகவே தோன்றும. (வளரும்)

### காஞ்சிபுரம ... ... ...

1-ம பக்கத்து வளர்ச்சி)

கள். நமது நாட்டில் சைவநெறி கலத்துக்கு காலம் சமயாச்சாரியர்களால புத்துயிர் பெறும் என்பது தெளிவாகும். சிறப்பாகச் சிவஞானசித்தியார் என்ற சித்தாந்த சாத்திர விளக்கமூலம் பாடம் சொல்லப்பட்டது. பலருடைய சந்தேகங்கள தீரக்கூடிய தெளிவான பேச்சுரைகள நிகழ்த்தப்பட்டு நன்மை பயந்தது சுற்றவாகளை அழைத்து விழாவெடுத்தல் சாலச் சிறந்தது என்று பெரியபுராணம் பேசுகிறது "கண்ணினால் விழாப் பொலிவு கண்டின்புறக" என்றபடி சுவாமிகளுக்கு காரைநகர் மக்கள் மரபு தெரிந்து வரவேற்பளித்தது சமயத்தொண்டாகும, திருவருளிலே நிலைத்த பணபுடைய மனத்தரான காரைநகர் தொண்டர் அவர்களுடைய குருபக்தியே சுவாமிகளை பல்லோருங்காண விழாவெடுக்கச் செய்தது. சைவ சமயப் பொலிவையும் அதன் உட்பொருளை எல்லாரும் அறியச் செய்தமை சமயத் தொண்டாகும். சுவாமிகள் யாழ்ப்பாணத்தில் கிளைமடம அமைத்து சமய சாத்திர பரிபாலனம் செய்யவும், தாய்நாடும சேய்நாடும் அன்பாக இருக்கவும் திருவுளங்கொண்டமையும் நாங்கள் செய்த நற்றவமாகும். சுவாமிகள் பரமாச்சாரியர்களாக சமய சாத்திரங்களிலே விதிக்கப்பட்ட சோபான முறைப்படி உபதேசஞ் செய்தற்கு தேர்ந்து குருபீடத்துக்கு வந்தமை மிகவும் மதிப்புக்குரிய செயலாகும், (திருவாதவூரடிகள் புராணம்) பரந்த ஞால கலைமுழுதும் ஆகம நூற் பகுதியும் பலசமய சாத்திரமும் தெரிந்து தெளிந்து நெறிப்பட வந்த குருபீடமாகும் ஆனபடியால் சைவசமயிகளாகிய நாங்கள் யாவரும் போற்றுதல் நம் கடமையாகும்.